தத்துவவிவேசினி

சென்னைலௌகிகசங்கத்தாரால்பரிபாலிக்கப்பட்டுவருகின்ற

வாராந்த திராவிட சுவக்கியான பத்திரிகை.

Vol. VI.—No. 23.] MADRAS:—SUNDAY JUNE, 5, 287. A. S. [Monthly, 4 Annas.

சொல்லுகசொல்லைப்பிறிதோர்சொலச்சொல்லை
வெல்லுஞ்சொலின்மையறிந்து.—குறள்.

ஆன்மவிசாரணை.
பிரார்த்தனை.
இந்துசமயசாரவிளக்கம்.
வர்த்தமானசங்கிரகம்.
நோட்டீசு.

அறிக்கை.

சந்தாக்களையும், பத்திரிகைவேண்டி
எழுதிக்கொள்ளுங்கடிதங்களையும்
வேப்பேரி சிலவர்ஸ் ரோட்டில்
மதிருஸ் செகுலர்சொசைட்டி ஆனரரிசெக்ரிட்டேரி
மெஸ்டர். அப்ஷன்துரைக்குநேராய்
அனுப்பவேண்டும்; அனுப்பாவிட்டால், பத்திரிகை
கிடைக்கமாட்டாது.

ஆன்மவிசாரணை.

(85-வது பக்கத் தொடர்ச்சி.)

தேகமும் ஆன்மாவுங் கலந்தொன்றாகவிருக்குந்தன்மையே மனிதனது நிலைமையென்று சொல்பவர்கள் கருத்தென்னை? நமக்குத்தெரிந்திருப்பது ஏகவஸ்துவேயல்லாமல் வேறல்லவே: அப்பொருள் பற்பல சொரூபங்களாய் நமக்குத்தோன்றுகின்றது. அச்சொரூபங்களோ பற்பல விகற்பகுணங்களுடையனவாய் விளங்குகின்றன. இக்குணங்களில் ஒன்றையேனும் பலவற்றையேனும் சிற்சில விகற்பத்தோடு சீவராசிகளிடத்துக் காண்கின்றோம். அவ்வாறு காணப்பட்டகுணத்தை, அல்லது குணங்களையே * சேதனமென்று சொல்லுகின்றோம். ஓர் கத்தியினிடத்து சிலபோது பளபளப்பை எவ்வாறு காண்கின்றனமோ, அவ்வாறே மனிதனிடத்திலும் ஜீவராசிகளிடத்திலும் சிலபோது கருவிகரணதிகளுக்குத்தக்கவாறு சேதனம் விளங்கக் காண்கின்றோம. தேகமும் ஆன்மாவும் வெவ்வேறென்று பலர் சொல்லக்கேட்டிருக்கின்றோம். கத்தியினது எஃகும் பளபளப்பும் வெவ்வேறுபொருள்களா? பளபளப்பு, எஃகினது சொரூபங்களிலொன்றாகிய கத்தியின்குணமன்றா? அதுபோலவே சேதனமெனப்படுவதும் வஸ்துவின் சொரூபங்களிலொன்றாகிய † மனிதனது குணமன்றா? எஃகு அல்லது அதனது சொரூபமாகிய கத்தியைத்தவிர பளபளப்பென்பது பிரத்தியேகமா யில்லாததுபோல, வஸ்து அல்லது அதனது சொரூபமாகிய மனிதனைத்தவிர சேதனமென்பது பிரத்தியேகமாயில்லை. நாம் கொஞ்சம் தண்ணீரைத்தெளித்தால் எஃகினது பளபளப்பு மாறிவிடுகின்றது, அதுபோலவே ஒருமனிதனது சிரத்தில் துப்பாக்கிக்கொண்டு சுட்டால் அவனது சேதனத்துவம் மழுங்கிவிடுகின்றது. எஃகினது தன்மையைமாற்ற அதனது பளபளப்பு எப்படி கெடுகின்றதோ அப்படியே, மனிதனது கருவிகளின் தன்மையைமாற்றச் சேதனத்துவங்கெடுகின்றது. ஆன்மாவென்பது பிரத்தியேகமாகிய ஓர்வஸ்துவா அல்லது கருவிகரணதிகளின் இயக்கத்தின்தெறிப்பா? அதுகுணமா குணியா? அகக்கருவிகளின்இயக்கத்தை யதுட்டித்த புறக்கருவிகளின் தெறிப்பே பிராணனென்பதற்குயாதேனும் சந்தேகமிலது. டாக்டர் எங்கில்டியுசொல்கிறதாவது. உயிருள்ளவஸ்துக்கள் யாவற்றும் அவற்றிற்குப் பிராணாதாரமாகிய பொருள்களை உபகரித்துவர அககக்கருவிகள் சேட்டிக்கும். அதுபோலவே அக்கருவிகளில் ஒன்றாகியமூளை தேகாதாரபலனைப் பெறுமளவும் சேட்டிக்கும்; இதனாலேயே பிராணன் உள்ளதும் இல்லதும் கண்டுதெளிதல் கூடுமாதலால், பிராணனைக் குணியென்றுசொல்லப்படாது.

தற்காலம் பரவியுள்ள ஆத்மசித்தாந்தமானது உவாந்தரநிலைமையுடையதாகவும், அறிவாதீதமாகவும் இருக்கின்றது, அந்த சித்தாந்தம் சித்தவிருத்திக்கு அத்திப்பூவென அறைதல் கூடும். இவ்விஷயத்தில் விடாய்கொண்ட நம்போலிகளுக்குச் சூக்கும சித்தாந்திகள் தக்கவிடைபகர்ந்து திருப்திசெய்கின்றாரில்லை; அவர்கள் தூலத்திற்கும் சூக்குமத்திற்கும் சம்பந்தமில்லையென்றும், அநித்தியமாகியமனிதன் நித்தியமாகிய ஆன்மாவை யறிதல்கூடாது என்றும் சொல்கின்றார்கள். நம்மொவ்வொருவருக்கும் ஆன்மா உண்டென்று வைதிகிகள் சொல்கின்றார்களே யல்லாமல், அஃது இதுவென்றும், இத்தன்மையினதென்றும், இங்குள்ளதென்றும், இவ்வாறு வருகின்றதெனறும், இவ்வாறு போகிறதென்றும், இத்தொழிலைச் செய்கின்றதென்றும் ஒன்றுஞ் சொல்கின்றிலர். ஆன்மசித்தாந்தத்தால் அறிவிற்குப் புலப்பட்டதென்னையோ? ஒருவனுடைய நாவைச்சேதித்து விட்டால் அவனுடைய ஆன்மாபேசாதே: அவன்வாயில் துணியடைத்து இறுக்கிக்கட்டிவிட்டால் அவனுள்ளிருக்கும் ஆன்மாபேசுமோ; சூக்குமமாகிய ஆன்மா தூலவஸ்துவால் அடக்கப்பட்டதே: வைதிக சமயத்தவருட்சிலர் ஆன்மா கடவுளால் சிருட்டிக்கப்பட்டதென்றும் சிலர் அநாதிநித்தியமென்றும் சொல்கின்றார்கள். கடவுளைப்பற்றி யுமக்கு என்ன தெரியுமென்றால், ஆன்மாவைப்பற்றி யெவ்வளவு தெரியுமோ அவ்வளவே தெரியு மென்றார்கள். ஆன்மக் கியானத்திலோ அறியாக்குழந்தைகளாக விருக்கின்றார்கள். ஆன்மா சித்பதார்த்தமாகவும் தேகம் சடபதார்த்தமாகவும் இருப்பதுண்மையேல் ஜடத்தின் ஒத்தாசையன்றி ஆன்மா தன்னையேன் விளக்கிக்கொள்ளப்படாது? ஆன்மா சூக்குமமாயின் தூலதேகத்திற் கட்டுப்படுவதேனோ? ஆன்மா அகண்டமாயின் கண்டமாகியதேகத்தில் அடங்கி நிலைப்படுமா? ஒன்றுக்கொன்று வெதிரேகமாயுள்ள தூலசூக்குமபதார்த்தங்களினது சையோகமே மனிதனென்று சொல்கின்றவைதிகிகள், வெதிரேகபதார்த்தங்கள் பொருத்தம் எவ்வாறு உடைத்தாயிருக்குமென்பதை யோசியாததென்னையோ?

(இன்னும்வரும்.)

* ஈண்டு சேதனமென்றது பியோகார்த்த சூசகபதமாய் உபயோகிக்கப்பட்டது.

† இவ்விடத்து சூணம் நீங்கலாகிய சடத்தை மனிதனென்றது பிரோதபௌஷிக நியாயத்தாலென்க.

பிரார்த்தனை.

(83-வது பக்கத் தொடர்ச்சி.)

கடவுளுடைய எதிர்கால சம்பவக் கியானத்திற்குப் பிரார்த்தனை ஒத்ததா.

நடந்த காரியங்களை நாம் எவ்வாறு கண்டுணர்ந்திருக்கின்றனமோ அவ்வாறே என்னென்ன காரியம் எவ்வெப்போது நடக்கப்போகின்றதோ அன்னன்ன காரியங்களைச் சதாகாலமும் முகத்தெதிர்தூக்கிய படத்தைப்போலக் கடவுள் கண்டுணர்ந்திருக்கின்றாரென்றும், அப்படி இனி நடக்கவல்லதை இதற்கு முன்னரோ கண்டுணருந் தன்மையே கடவு ளிலக்கணத் தொன்றென்றும் வைதிகிகள் கூறுகின்றனர். இங்ஙனமாயின் இன்னின்னகாலத்து இன்னின்னபடி நடக்கற்பாற்று என்று விதித்துவிட்ட கடவுளுடைய நோக்கத்தில் முக்கால சம்பவங்களும் இறந்தகால சம்பவங்களே யாகுமன்றா? ஆயின், நமக்குச் சம்பவிக்கப்போகின்ற ஓர் தீமை சம்பவிக்கா திருக்கும்படி பிரார்த்திக்கின்ற நாம், சம்பவித்ததீமை சம்பவித்தில்லா திருக்க ஏன் பிரார்த்தித்தல் கூடாது? நாம் ஏன் அவ்வாறு நடந்துவிட்ட விஷயத்தைப்பற்றிப் பிரார்த்திக்கின்றதில்லை? நடந்துபோய்விட்ட காரியத்தை எப்படி நடக்காதிருக்கச் செய்ய

லாமெனின், கடவுள் விதித்துவிட்ட காரியத்தைப், பின்னிட்டு நாம் செய்யும் பிரார்த்தனையால் எப்படி விதிக்காதிருக்கச்செய்யலாம்? செய்தல் கூடாதே: மனிதனுக்கு எதிர்காலக்கியானமின்மையால், கடவுளையும் தன்னைப்போலெனக்கருதி, தன் அறியாமை காரணமாக அவர் விதித்ததை விதிக்காதிருக்கும்படி வீணே பிரார்த்திக்கின்றான். என்னவிதமாய்ப் பார்த்தாலும் பிரார்த்தனையில் திலப்பிரமாணமேனும் நியாயமுள்ளதாய்த் தோன்றவில்லை. கடவுள் இனி நடக்கப்போகின்றதை உணர்ந்தவராகவேனும், உணராதவராகவேனும் இருத்தல்வேண்டும்; உணர்ந்தவராக விருப்பின், அதை மாற்றுதல் கூடாது. ஆகையால் பிரார்த்தனையால் பயனில்லை. எல்லாச் சம்பவங்களும் முன்னமே விதிக்கப்பட்டிருந்து அதனை அவர் உணராதவராயின், அவரது கியானம் மனிதர் கியானத்திற்கு விசேஷப்பட்டதல்லவாதலால் அவர் கடவுளல்லர்.

“கடவுள் தாம் விதித்துள்ளவற்றை உணர்ந்தே யிருப்பினும் அவை பிரார்த்தனையினால்தான் ஒவ்வொருவருக்கும் சித்தியாகுமென்றும் விதித்திருக்கின்றமையின், பிரார்த்தனைசெய்யவேண்டியது அதிமுக்கிய” மென்று சில மதவாதிகள் சொல்லுகின்றனர். இது உண்மையாயின், மனிதப் பொறுப்பென்பது ஒன்றுமேயில்லை. ஒருவன் பிரார்த்தனைசெய்து அதன்மூலமாகத்தான் தனக்குவேண்டியதைப் பெற்று வாழவல்லானென்று விதித்திருந்தால் யார் கூறினும் யார் கூறாதுவிடினும் அவன் பிரார்த்தனைசெய்யவே போகின்றான், ஆதலால் பிரார்த்தனை செய்வதும் செய்யாதொழிவதும் அவன் வசத்ததல்லவே: பிரார்த்தனைசெய்வது அவன் வசத்ததல்லாதபோது, மனிதன் பிரார்த்தனைசெய்தால் தான் பெறவேண்டியதைப் பெறுதல்கூடுமென்று பொறுப்பை மனிதன்மேல் சாற்றுவது எவ்வளவு பேதமையான நியாயம். மனிதப்பொறுப்பாகாத காரியத்தை மனிதப்பொறுப்பென்று பிராந்தத்தினால் செய்வதும் செய்யச் சொல்வதும் அறிவாளிகள் செய்கையா? அறிவில்லார் செய்கையா? கடவுள் உண்மையாகவே சர்வக்கியானியும் சர்வபரிபூரணரும் நிர்விகாரியும் ஆயின், அவர் முன்னரோ இன்னின்னாருக்கு இன்னின்னகாலத்தில் இன்னின்னது சம்பவித்தலே சரியென்று உணர்ந்து விதித்துவிட்ட விதியை, மனிதப்பொறுப்பாய் பிரார்த்தனைசெய்து விலகச்செய்ய முயலுதல், அறிவிலா விழலர் செய்கையாம்.

கடவுளுடைய ஞானத்திற்குப் பிரார்த்தனை ஒத்ததா ?

நிர்மானமாய்ப் பிரார்த்தனையினுடைய நோக்கந்தான் என்னையோ? மனிதன்தான் கடவுளினும் மேம்பட்ட கியானமுடையவனெனத் தன்னை மதித்து தனக்கு எதுஎது சம்பவிக்கவேண்டுமோ அதுஅதையே இயற்றும்படி கடவுளுக்குச் சொல்லும்படியான மதியூகித்துவம் தன்பாலதேயென் றெண்ணி யிருக்கும் எண்ணமேநோக்கமாம். பிரபஞ்சாகாரமாகிய நிலம் நீர் தீ கால் வளி என்னும் பூதானுபூத காரியங்களைச் சிருட்டித்து, சூரிய சந்திராதி நக்ஷத்திரங்களை நாட்டி, நடத்திவரும் அகண்ட சொரூபியை, ‘நீ இவ்வாறுசெய்’ என்று மதியூட்டும் திறம் தம்மிடத்துண்டென்று கொள்ளும் மனோபிராந்தத்தை விட ஆபாசமான எண்ணமும் செய்கையும் வேறேயுண்டா? கிஞ்சிங்ஞியனா சர்வங்ஞியனுக்கு அறிவூட்டுவது? அபூரணக் கியானியா பூரணக்கியானிக்குபுத்தி கற்பிப்பது! அஞ்ஞானியா மெஞ்ஞானிக்கு வழிகாட்டுவது? மனிதனா கடவுளுக்கு நயவாசகமாய் போதிப்பது! இத்தகைய கோடிகோடி அடாதசெய்கைகளெல்லாம் பிரார்த்தனைக்குஉள்ளுறையாகின்றமையான், பிரார்த்தனையாகிய அபசாரஞ்செய்த ஆஸ்திகர் ஒவ்வொருவரும், தாம் அஞ்ஞானம் காரணமாக வியற்றிய அபசாரத்தைப் பொறுத்தருளும்படி மன்னிப்பு கேட்டுக்கொள்ளல்வேண்டும். கடவுளிடத்து நம்பிக்கையுள்ள சகலரும் அவரிலக்கணமாகிய உயர் ஒப்பில்லா ஞானத்துவத்தை அங்கீகரித்தல்வேண்டும். அவரது உயர் ஒப்பில்லா ஞானத்துவத்தை அங்கீகரித்தவர்கள், தத்தமக்கு வேண்டற்பாலது இன்னதென அவருக்குத் தெரியாதென்று எண்ணி, அவரைப் பிரார்த்தனைமூலமாய்க் கேளாதிருத்தல்வேண்டும். அப்படி பிரார்த்தனை வாயிலாய்க் கேட்போரைக் கடவுளுடைய விசேஷத்துவத்தையும் இலக்கணத்தையுங் காட்டிக் கண்டித்தல்வேண்டும்.

கடவுள் சர்வ நன்மையுடையார் என்பதில் நம்பிக்கையுடையவர்கள் பிரார்த்தனைசெய்யத்தக்கவர்களா!

நாம் வேண்டிக்கேட்காமல் கடவுள் தாமே நமக்கு வலிந்த நன்மையைச்செய்யார் என்னும் எண்ணமுடையவர்களே பிரார்த்தனை செய்வார்களாதலால், அன்னோர்க்கு கடவுள் சர்வநன்மையுடையாரென்பதில் நம்பிக்கையின்மையும், தாமே தமக்கு வேண்டிய நன்மையைத் தன்முயற்சியால் பெறுதல்கூடுமென்பதில் நம்பிக்கை யுண்மையும் ஸ்பஷ்டம். கடவுள் சகலரிடத்தும் கருணாவீக்ஷண்ணிய முடையவரும், நன்மையைப் புரிபவருமாயின், அவர் யார்யார்க்கு எது எது மிகுந்த நன்மையைத் தரத்தக்கதோ அதுவதையே தம்மை வேண்டார்க்கும் வேண்டிச்செய்வர். இந்தவிஷயத்தில் மடசாஸ்காவென்னுந் தீவிலுள்ள சனங்கள் நம்மிலுந் தெளிந்தவர்கள். அவர்கள் தங்கள் கடவுளை நோக்கி “தேவரீர் யார்யார்க்கு எதுவெது நன்மையைத் தரத்தக்கதோ அதுவதை நீவிர் தாமே உணர்ந்து செய்யத்தக்கவராதலால், நாங்கள் வேண்டிப் பிரார்த்திக்க வேண்டியதொன்றில்லை” யென்று சொல்லிப் பின் துட்டதேவதையை நோக்கித் தமக்கு இடுக்கண்புரியாதிருக்கும்படி பிரார்த்திப்பர். சகலருக்கும் இன்பத்தைத் தரத்தக்க நன்மையென்பன பலவும் கடவுள் வசத்ததேயாயினும், அவற்றை அவர்வேண்டாது அளிக்காரென்பதும் நன்மையை வலிந்து புரியாரென்பதும், (ஆகையால்) அவருக்குப் பசுக்கருணை இலதென்பதும் பிரார்த்தனையின் அந்தரங்க தாத்பரியமாகின்றது. இதுவல்லாமலும் நமக்கு வேண்டிய நன்மையினைக் கடவுளுணர்ந்து இயற்றுவர் என்னும் நம்பிக்கை இல்லாமல், தம்முயற்சியினாலேயே சகலத்தையும் அடைதல் கூடும் என்னும் திடசித்தம் பிரார்த்தனை செய்வாரிடத்து உண்டென்றும், ஆகின்றது. துன்பமும் துக்கமும் இடுக்கணும் அபாயமும் வந்தகாலத்து மனிதர் பிரார்த்தனை செய்கையால் அவற்றை யொழித்தருளும்படிக் கடவுளை வேண்டுகின்றனர். இவ்வாறு செய்யுஞ் செய்கையின் தாத்பரியந்தான் என்னை? கடவுள் துக்கத்தைத் தந்தபோது சுகத்தைத் தரும்படி வேண்டுவதும், துன்பத்தைத் தந்தபோது இன்பத்தைத் தரும்படி வேண்டுவதுமாகிய கடவுட் செய்கைக்கு மாறுபட்ட செய்கையன்றோ பிரார்த்தனை? வாசாகயிங்கரியமாய் வீண்பகட்டு செய்யாமல் உண்மையாகவே சனங்களுக்குக் கடவுளிடத்து நம்பிக்கையும், அவர் சர்வ நன்மையைப் புரிபவர் என்பதில் விசுவாசமும் சத்தியமாய் உண்டேல், சுகம் வரினும் துக்கம் வரினும், இன்பம்வரினும் துன்பம்வரினும் செல்வம்வரினும் வறுமைவரினும் மெய்த்திருவரினும் வெந்துயர்வரினும், ஒத்திருக்குமுள்ளத்துறவுடையோராய், அபசாரமாகிய பிரார்த்தனையைச்செய்யார்.

(இன்னும்வரும்.)

இந்துசமயசாரவிளக்கம்.

(பிரமசிருட்டி. 87-வது பக்கத்தொடர்ச்சி.)

பிரத்தியட்சமான விநாயகரிடத்திலே பிரமன் அக்கடவுளை மறவாதிருக்கத்தக்க வரமும் இவ்வுலகத்தை விக்கினமில்லாமற் சிருட்டிசெய்யத்தக்க சக்தியும் பெற்றுக்கொண்டபின்பு அக்கடவுள் தம்மிடத்திருக்கிற அனந்த சத்திகளில் கிரியாசத்தி ஞானசத்தியென் றிரண்டு சத்திகளை நீ தியானித்து உன் சிருட்டித் தொழிலை நடத்தக்கடவையென்று கிருபைசெய்துமறைந்துபோயினர். அப்படியே பிரமன் தியானித்தவுடன் அவனுக்கெதிரில் சித்திபுத்தியென்னும் பெயரோடு தோன்றின அவ்விரண்டு சத்திகளிடத்திலே தனக்குஇடையூறுவராமற் காக்கும்படி தனக்குப புத்திரிகளாயிருக்கும்படியான வரம் பெற்றான். பின்னர் பிரமன் இச்சித்திபுத்திகளோடும் வீற்றிருப்பதாக விநாயகரைப் பாவித்துத் தியானஞ்செய்து மீளவும் சிருட்டி செய்ய ஆரம்பித்தான். இடையூறில்லாமல் தன் மனதால் எழு புத்திரர்களைச் சிருஷ்டிசெய்து, அவர்களை நோக்கி நீங்கள் இவ்வுலகத்தைப் பழுதில்லாமற் படைக்கக்கடவீர்களென்று கட்டளையிட்டான். அதற்கு அவர்கள் ஒவ்வாமல் துரவிகளாய்ச்சென்று தவத்தினைச்செய்து முத்தி யடைந்தார்கள். மீளவும் சிருட்டிசெய்த எழு புத்திரர்களும் அவ்வாறேசென்று முத்தி யடைந்தார்கள். பின்னர் சனகராதி நால்வரையும் நாரதரையும் சிருட்டித்து, பிராமணர்களையும் அக்கினியையும் தனது முகத்திலும், க்ஷத்திரியர்களைப் புயத்திலும், வைசியர்களைத் தொடையிலும், சூத்திரர்களைப் பாதத்திலும், சந்திரனைச் சித்தத்திலும், சூரியனை விழியிலும், இந்திரனை வதனத்திலும், மருத்துக்களைச் செவியிலும், ஆகாயத்தை உந்தியிலும், தேவலோகமுதலான மேலுலகங்களை முடியிலும், பூலோகமுதலான கீழுலகங்களை அடியிலும், கிழக்காதி திசைகளைக் காதிலும், இவ்வாறே பர்வதங்கள் முதலான சகல சராசரங்களையும் சிருட்டி செய்தான். அதுமுதல் இவ்வுலகமானது உருத்திரன் - விண்டு- பிரமன் - அக்கினி - ஜலம்-பூமி- ஆகாயம்-வாயு-திக்குப்பாலகர்-மனுக்கள்- முனிவர்கள்- வசுக்கள்-இயக்கர்கள் - மிருகங்கள்-மற்ற உயிர் வர்க்கங்கள் என்னும் இருபத்தொருவகுப்புடனே பொருந்தியிருக்கின்றது. பிரமதேவன் மேற்கூறிய முறைமைப்

படி சகல வண்டங்களையும் படைத்தவுடன் ஆன்மகோடிகள் பலவு மோங்கி நிலைபெற்று வாழ்ந்தன. (11)

விளக்கம். (11) முன்னே ஆயிரதேவ வருடம் தவஞ்செய்தபோது அளவற்ற பக்திகள் பெருகத்தக்கதாகக் கொடுத்த வரமும், யாவையும் சிருட்டி செய்யத்தக்கதாக கொடுத்த சத்தியும் போதாமல் பின்னும்யோசஞ்செய்து வேறே வரம் பெறவேண்டி யிருந்தது முன்னேபெற்ற வரம் விக்கினமில்லாமல் சிருட்டிசெய்யப்பெற்றதல்ல வாதலால், விக்கினம் வராதபடி இப்போது பெற்றனன்.—விநாயகரிடத்தில் அவர் சகளீகரித்தபோதே அநேக சத்திகள் உண்டா யிருந்தார்களாக்கும். புருஷனிருக்கும்போது மனைவிக ளிருக்கவேண்டியது அவசியந்தான்.—சிருட்டிசெய்யும்படி விநாயகர் பிரமனுக்கு சத்திகொடுத்திருந்தும், அந்தப்படி சிருட்டிசெய்யமாட்டாத மூடனாயிருப்பதைக்கண்டு உதவிபுரியும்படி தன்னிடத்திலிருந்த சத்திகளில் இரண்டுபேரைத் தந்தனர். ஆனால் இவ்வாறு சிருட்டி தடைபடுமென்று முன்னறிந்து விநாயகர் செய்யாமற்போனது அவருடைய அஞ்ஞானமே.—கிரியா சத்தியும் ஞானசத்தியும் சித்திபுத்தி யென்கிற வேறு பேர் ஏன் தரித்தார்களோ? பின்னால் விநாயகர் அவர்களை விவாகஞ்செய்துகொள்ளப்போகிற நிமித்தமா யிருக்கலாம். அந்த சத்திகள் விநாயகரோடுகூடவே உற்பத்தியானவர்களா யிருப்பார்களாகில் அவருக் கவர்கள் சகோதரிகளாகவேண்டும்; அப்படிக் கன்றி மனைவிகளாக யிருந்தபோதிலும், விநாயகர் பிரமனுக்கு சிருட்டிப் பிதாவாகையால அவர்கள் இவனுக்குத் தாய்களாகவேண்டும். அப்படிப்பட்டவர்களை பிரமன் தனக்கு தத்துபுத்திரிகளாக வைத்துக்கொண்டான். இந்தப் பெண்களைக் கலியாணஞ்செய்துகொடுத்து விநாயகனை மருமகனாக வசப்படுத்திக்கொள்ள எண்ணங்கொண்டும், இச்சத்திகள் அவருக்கு மனைவிக ளென்று அறிந்துமே இச்சித்திபுத்திகளோடும் வீற்றிருப்பதாக விநாயகனைப்பாவித்துத் தியானஞ் செய்தான்.—தன் மனதால் ஏழுபுத்திரர்களைச் சிருட்டிசெய்து அவர்களைநோக்கி 'நீங்கள் இவ்வுலகத்தைப் பழுதில்லாமற் படைக்கக்கடவீர்கள்' என்று கட்டளையிட்ட தென்னையோ? முதற்கடவுளாகிய விநாயகர் அப்படி உத்திரவுகொடுக்கவில்லையே; அவருக்குத்தள்ளாமல் இவனை சிருட்டி செய்யச்சொன்னால், இவனுக்குத் தள்ளாமல் ஏழுபுத்திரர்களுக்குக் கட்டளை யிட்டது—ஒருவன் நாயையேவினால், நாய் வாலையேவினதை யொக்கும். விநாயகர் அவ்வேழுபுத்திரர்களைநோக்கி நீங்கள் இவ்வுலகத்தைப் படையுங்களென்றனனே, இவ்வுலகமென்பது எது? அதுவரையில் பூமியு மில்லை ஆகாய முதலியவுமில்லை; புராணிகர் இந்தக்கதையெழுதினபோது இவ்வுலகமிருந்ததால் அதைச்சுட்டிச்சொல்லினராக்கும். அப்புத்திரர்கள் தகப்பன் சொல்லை மீறி தவத்திற்குச் சென்றதால் அப்போதே துன்மார்க்கம் பிரவேசித்துவிட்டது. மறுபடி சிருட்டி செய்த ஏழு புத்திரர்களும் அவ்வாறே யானதால், பிரமன்விதியில்லாமல் தானே சிருட்டிசெய்யத் தொடங்கினன். கலகத்திற்கு நாரதன்வேண்டியிருப்பதால் அந்தக் கலகக்காரனைப் பிரமன ஆதியிலேயே சிருட்டித்தனனோ அல்லது புராணிகர்ஏற்படுத்திவிட்டனரோ?—காதிலும் மூக்கிலும் கண்ணிலும் மற்ற அவயவங்களிலும் சிருட்டியைப்பார்க்க வெகு விந்தையா யிருக்கிறது. சகலத்தையும் மனதால் சிருட்டிசெய்திருக்கலாகாதா? அது நாம் கேட்கத்தக்ககேள்வியல்ல, அதுஅவருடைய சித்தம். ஆகாயத்தை உந்தியில் சிருட்டித்தனனும், அதற்கு முன்னே பிரமன் தான் எங்கே யிருந்தான்? அவனைப்படைத்த விநாயகர்தான் எங்கே யிருந்தார்? சத்திகள்தான் எங்கேயின்றார்கள்? பிரமன் படைத்த புத்திரர்கள் தாம் எங்கே தவஞ்செய்தார்கள்? தேவலோகமுதலிய மேலுலகங்கள் மேலே இருப்பதினால் முடியிலேதான் சிருட்டிசெய்யவேண்டும், பூலோக முதலிய கீழுலகங்கள் கீழேயிருப்பதினால் அடியிலேதான் சிருட்டிசெய்யவேண்டும்; இந்த சிருட்டிகள் அதிசயமானவைகளல்ல. காதிலிருந்து கிழக்காதிதிசைகளைச் சிருட்டித்ததுதான் மஹா அருமை! அந்தத் திசைகள் என்னரூபமோ! என்னவஸ்துவோ! மற்றும் எப்படிப்பட்டவையோ! பிரமன் வந்து சொன்னாற்றான் தெரிந்துகொள்ளக்கூடும். இவ்வுலகமானது உருத்திரன்-விண்டு-பிரமன்- அக்கினிமுதலிய இருபத்தொரு வகுப்புடனே பொருந்தி யிருக்கின்றதென்பவற்றுள் நாம் காண்பவைகள் போக மற்றவைகளை, பிசாசை ஆவேசத்தினால் காணக்கூடியதுபோலக் கண்டால் காணக்கூடுமாக்கும். திக்குப் பாலகர்களைக் காணவேண்டுமாயின், பூமியின் அந்தந்தத்திசைமுனையில் போய்ப் பார்க்கவேண்டும்; பூமி உருண்டைவடிவாயிருக்கின்றதென்பதினால், பூமிக்கு முனைகளில்லாமைபற்றி அப்படிப்போய்ப் பார்ப்பது நம்மால் முடியாத காரியம்.—சிருட்டி இன்னதென்று அறியாத பிரமன்தான் விநாயகருடைய வயிற்றிற் போய்ப்பார்த்துத் தெரிந்துகொண்டான்; அப்படியிருக்க, தம்புதல்வர்களைச் சிருட்டிசெய்யச்சொன்னது பிரமனுடைய மதியீனமோ, அல்லது அப்படி எழுதிவைத்த புராணிகருடைய மதியீனமோ? மனதினாலும் காதிலும் மூக்கிலும் சுலபமாய்ச்செய்து விடும்படியான சிருட்டிக்குப் பிரமனவெகுகாலமதவமும் யோகமுஞ்செய்து மார்பால் நகர்ந்தது அதிசயமே. பிரதமத்தில் பிரமன சிருட்டித்த விகார ரூபிகள் அழித்து விடப்படக் காணோம், ஆதலால் அவைகள் தாம் பூதப் பிரேத பிசாசங்களாகவும், எமதூதர்களாகவும், யானைமுகன் பன்றிமுகன் கரடிமுகன் முதலான ராட்சதர்களாகவு மிருந்திருக்கவேண்டும்.—சகல பிராணிகளிலும் ஜதைஜதையாய்ச் சிருஷ்டிசெய்ததாகத் தோற்றவில்லை; விநாயகரிடத்து இளைப்பாறிக்கொண்டிருந்த சகல ஆன்மகோடிகளுக்கும்ஒருமிக்கதேக மளித்ததாகத் தோன்றுகிறது. யாவரையும் குழந்தைகளாக சிருட்டித்தால் காப்பாற்றுவது கஷ்டமெனக்கருதி, அவனவனும் பிரயாசப்பட்டு ஜீவிக்கும்படி தடி ஆள்களாகத்தான் சிருட்டி செய்திருக்கவேண்டும். இவர்களெல்லோரும் வசிப்பதற்கு வீடுகளும் க்ஷத்திரியர்கள் ஆளுவதற்கு நாடு நகரங்களும் பிரமனேதான் ஒருமிக்க நிர்மித்துக்கொடுத்திருக்கவேண்டும்; நாம் மகா பாவிகளாதலால், நமக்கு அவன் அப்படிச்செய்யவில்லையோ, அல்லது தன்மக்களுக்குத் தான் செய்ததுபோல, அவனவன் மக்களுக்கு அவனவன் செய்வது கடமையாகுமென்று விலகிவிட்டனனோ? அப்படியாயின் அவனது பரபத்தியம் நமக்குவேண்டுவதே யில்லை —ஆதிபிதா அல்லது மாதாவாகிய பிரமனுடைய முகத்திலும், புசத்திலும், தொடையிலும், பாதத்திலும், மனிதசாதிகள் பிறந்ததுபோல, பின்னிட்டுந் தாயல்லது தந்தையினுடைய அந்தந்த ஸ்தானத்திலல்லவோ அந்தந்தசாதியார் பிறத்தல்வேண்டும். அப்படிக்கிலலாமல், உயர்வுதாழ்வான எந்தசாதியாராலும் ஸ்திரீ புருஷசையோகத்தால் கருப்பையிற் கட்டுண்டு யோனியின் வழியாய்ப் பிறக்கும்படி பிந்தி ஏற்பாடு செய்தனனுக்கும்! முந்தி யிப்படிப்பட்ட கதைகள் ஏற்பட்டிருந்ததினாற்றான், இவைகள் அரேபியன்நைட்டு முதலான கதைகளைச் சுலபமாய் எழுதுவதற்கு வழிகாட்டியா யிருந்தன. விநாயகபுராண முழுதிலும் ஆபாசங்களுக்குக் குறைவில்லை; ஆதலால், விசித்திரங்கள் நிறைந்த திருமணப்படலத்தையும், தேவேந்திரன் உபாசித்த படலத்தையும் கொஞ்சம் ஆராய்ச்சிசெய்துவிட்டு, பின்பு கருடபுராணத்தை எடுத்துக் கொள்ளுவோம். எந்தப்புராணமும் கந்தப்புராணத்திற்கு நிகரில்லை. பூர்வத்திலிருந்தவர்கள் அக்காலத்திற்குத் தக்கபடி தங்கள் கருத்துக்கிசைந்த கதைகளை யெழுதினார்கள்; இக்காலத்திலும் அவற்றை நம்பி யிருக்கிறவர்களைப்பற்றி நாம் விசனப்படவேண்டியிருக்கிறது.

(இன்னும்வரும்.)

வர்த்தமானசங்கிரகம்.

பர்மா.—காப்டென் வாகான்என்பவரைக்கொலைசெய்தவனை ஒருகூடாரத்தில்சிறைப்படுத்தியிருந்தபோது,அவன் மூன்றுநாலு நாளைக்குப் பின்பு கைகால் விலங்குடனே தப்பித்துக்கொண்டு ஓடிப்போய்விட்டான். காவலிருந்த போலீஸ் காவலாளி தூங்கிக் கொண்டிருந்தானென்றாவது தூக்கமயக்கமாயிருந்தானென்றாவது ருசுவானபடியால், அவனைசேவகத்தைவிட்டு நீக்கி அவனுக்கு ஒன்பது மாசம் காவல் தண்டனைவிதிக்கப்பட்டது. ஆனால் அந்தக் கொலைபாதகனுடைய தாக்கம் இன்னும் ஒழியவில்லை. அவனுடைய கால்களில் விலங்கு வளையங்கள் அப்படியே இருந்தபோதிலும், அவற்றைப் பிணைத்திருக்கிற சங்கிலியைமாத்திரம் ஒடித்துப்போட்டான். இந்தஸ்திதியிலே பசியுடனே மூன்று நான்குமயில் தூரத்திலிருக்கிற ஒரு கிராமத்துக்குப்போய், அங்கே சாப்பாடு இரந்துகேட்டான். அங்கே ஒருவன் அவனுக்கு சாப்பாடுபோட்டு அவனை ஓரிடத்தில் திரும்பக்கொண்டுவந்து பத்திரமாய்ச் சேர்த்தான். அவ்விடத்திலே அந்தக் கொலைபாதகன் மறுபடி அகப்பட்டுக்கொண்டான். அந்தக்கொலைபாதகனை அன்னங்கொடுத்து ஆதரித்த உபகாரிக்கு பதில்உபகாரமாக இருநூறு ரூபாய்அபராதம் போடப்பட்டது. இந்தக்கைதியோடுகூட அந்தக்கொலையில சம்பந்தப்பட்டிருப்பதாக இன்னும் எட்டுபேர் கைதுசெய்யப்பட்டிருக்கிறார்கள்.

ஆமதாபாத்.—பரோடாவைத்தாண்டினவுடனே வண்டித்தொடர் ஒரு நதிக்குக் குறுக்கே இருப்பு வாராவதியின்பேரில் வெகு மெதுவாய்ச்சென்று, ஆமதாபாத்துக்குப் போவதற்குமுன்னமே ஒருதேசத்தைக் கடக்கிறது. அந்த லயனிலே பெரியபெரிய குரங்குகள் மரங்களின்பேரில் அங்குமிங்கும் குதித்துக்கொண்டிருந்து, வண்டித்தொடர்வந்ததே லயனுக்குப் பக்கத்தில் குதித்தோடி வேலிகளிலும் மரங்களிலும் பாய்கின்றன; அவற்றின் உடம்பு நிறம் நரைவர்ணம், கறுப்புமுகம், வால் மிகவும் நீண்டிருக்கின்றது; அவற்றின் கைகால்கள் மிகவும் நீண்டு வலுவுள்ளவையா யிருக்கின்றன. லயனுக்கு நெருங்க வயல்களிலே மயிற்கூட்டங்கள் உலாவித்திரிகின்றன. ஆமதாபாத்திலே ஆயிரக் கணக்கான காக்கைகள் லயனுக்கு சமீபத்திலே மரங்களின் உச்சியில் சேர்ந்துகொண்டு, படுக்கைக்குப் போவதற்கு முன்னமே காது செவிடுபடும்படியான கூச்சலிடுகின்றன. ஸ்டேஷனுக்கு அந்தண்டை மூலையிலே மைனாக்கள் இரண்டுமரங்களின்பேரில் கும்புகும்பாய்க்கூடிக்கொண்டு தூக்கங்கெட இரவெல்லாங் கத்துகின்றன.

உதகமண்டலத்திலே மியூசியம் ஏற்படுத்துவதற்காக மதிப்புத்தொகை ரூ ஆறாயிரத்து நானூற்றுப்பத்துகவரன்மெண்டார் சாங்ஷன்செய்திருக்கிறார்கள். கவரன்மெண்டாரிடத்தி லிருக்கிற புரொவின்ஷியல் ரிசர்வ் பண்டிலிருந்து ரூ ஆயிரம்கொடுக்கப்பட்டிருக்கிறது; மற்றது 1887-88ஷுத்தில் கொடுக்கப்படும்.

சீனர்கள்.—புருஷர்கள், ஸ்திரீகள், சிறுவர்களாகிய தொண்ணூறுபேர்பர்மாவுக்குவந்து,சீனப்படைச்சேவகர்களின் உபத்திரவநிமித்தம் சான்டா கிராமத்தைவிட்டு ஓடிவந்துவிடவேண்டியிருந்ததென்றும், லோயர்பர்மாவிற்குப்போய் அவ்விடத்திலே நிலைத்திருக்க இஷ்டமிருக்கிறதென்றும் அவ்விடத்திய டிபிட்டி கமிஷனருக்குத் தெரிவித்துக்கொண்டார்கள். சர்க்கார்செலவிலே ரங்கூனுக்குப் போகும்படி அவர்களுக்கு உத்திரவு கொடுக்கப்பட்டது. அவர்கள் பிகியூவுக்குப்போவார்களாம்.

மைமென்சிங்கின் ஒரு மாமலிய ஜமீன்தார் வருஷத்தில் ரூ 3,000 வரும்படியுள்ள ரூ 30,000 பெறுமான பூஸ்திதியை அந்த டிஸ்டிரிக்டிலுள்ள கங்கால் கிரோஹாம் பாடசாலைக்குக் கொடுத்திருக்கிறார். இனி அந்தப் பாடசாலைக்கு சையத் நபாப் அல்லிபாடசாலையென்று பேர்கொடுக்கப்படும். பப்ளிக் இன்ஸ்திரக்ஷன் டைரெக்டர் ஆனவர் இந்தநன்கொடையை பிரதேச கவரன்மெண்டாருக்குதெரிவித்திருக்கிறாரென்று ஒரு கல்கதா பத்திரிகை கூறுகின்றது.

மண்டலே டெலகிராம்.—புத்தராஜாவென்றுபெயர்வைத்துக்கொண்டிருந்தவனை மையிங்கியானுக்குச் சமீபத்தில் ஓர் கிராமத்திலே வளைந்துகொண்டு அவனுடைய சொத்துகளோடு கூட பிடித்துக்கொண்டார்கள். போச்சின் என்பவனை இத்தாகுட் கிராமத்தார் சுட்டுக்கொன்றார்கள். அவனுடைய கூட்டத்தைச்சேர்ந்த ஐம்பதுபேர் கலைந்துஓடிப்போனார்கள். லிம்பின் சிற்றரசன் சென்றமீ 20உ மூன்குக்குக்குக் கொண்டுவரப்பட்டதின்பேரில், மோனிலுள்ள டிபிட்டி கமிஷனருக்கு உள்ளாகிவிட்டான்.

பங்காளத்திலுள்ள தர்பங்கா மகாராஜாவும் மகாராணியும் பார்க்கு அக்கினிச்சேத பரிகாரநிதிக்கு சென்னை ஷெரீப்புமூலமாய் ரூ 2,000 விராளமாக அனுப்பினார்கள்.

இன்கம்டாக்ஸ் கலெக்டரானவர் பிரதேச பத்திரிகைகளுக்கு வரிபோடும்பொருட்டு, சகாயிகளையும் செலுத்தப்படுந்தொகைகளையுங்குறித்து ஜாபிதா கொடுக்கும்படி கேட்டதற்கு பத்திராதிபர்களிலொருவர் மறுத்துவிட்டதாய் ரிவினியூபோர்டுக்குத் தெரிவித்ததாகவும், போர்டாருடைய அபிப்பிராயத்தை கவரன்மெண்டாரும் ஒப்புக்கொண்டு, அவரவருடைய சொந்த வரும்படியைக்குறித்து கலெக்டர் விசாரித்துத்தெரிந்துகொள்ளவேண்டியதேயல்லாமல், பத்திராதிபர்களுடைய சகாயந் தேடக்கூடாதென்று உத்தரவானதாகவும் கேள்வி.

அறிக்கை.

நமது மெம்பர்களும் கையொப்பநேசர்களும் தாங்கள்பெறுகிற ஒருபிரதிக் கிரமமாக "தின்கர்" என்னும் இங்கிலீஷ் பிரதியாவது, "தத்துவவிவேசினி" என்னுந் தமிழ்ப்பிரதியாவது பெறவிரும்பினால்,அடியிற்கண்டிருக்கிற குறைந்தவீதத்திற்குப் பெற்றுக்கொள்ளலாம்.

மாசமொன்றுக்கு அதிகமாகவாங்குகிற

இங்கிலீஷ் பிரதி - க - இ .. அணா ச
தமிழ்ப்பிரதி ... - க - இ ... அணா உ

இங்கிலீஷ் பிரதியாயின் இரண்டும் தமிழ் பிரதியாயின் நான்கும் ஒரேதபாற்செலவில் அனுப்பக்கூடும்.

இவ்விதமாய்ப் பத்திரிகையைப் பரவச்செய்து, இரட்டைப்பேற்றுச்சகோதரர்களாகிய—மடமை, மூடபக்தி—என்னும் இராக்கதர்களோடு போராடி வெற்றி பெறுவதற்கு நமது மெம்பர்களும் நண்பர்களும் துணைபுரிவார்களென்று நம்புகிறோம்.

இந்தியாவிலுள்ள

சுவக்கியானிகளை

மதிராஸ் ஸிக்கியுலர்சோசைட்டியில்

மெம்பர்களாகச் சேரும்படி

கேட்டுக்கொள்ளலாகின்றது.

உள்ளூர்மெம்பர் - மூன்றுமாசத்திற்கு—ரூ 3—0—0
வெளி ,, ,, —ரூ 1—14—0

செலுத்தவேண்டும். அப்படி சேருகிறவருக்கு "தின்கர்" என்னும் இங்கிலீஷ் பத்திரிகையாவது, "தத்துவவிவேசினி" யாவது இலவசமாக அனுப்பப்படும்.

தத்துவவிவேசினி

நான்குபக்கம், பிரதி 1க்கு விலை அணா 1.

தமிழ்சந்தாவிபரம்.

		Rs	A.	P.
மாசம்	1-க்கு	0	4	0
ஷை	3-க்கு	0	10	0
ஷை	6-க்கு	1	2	0

முன்பணஞ்செலுத்தவேண்டும். சந்தாவோடுகூட, இந்தியாவிலும் பர்மாவிலுமுள்ள வெளியூரார் மாசமொன்றுக்கு ஒருஅணாவீதமும், சிலோனிலுள்ளவர்கள் வாரமொன்றுக்கு ஒரு அணா வீதம் ஆறுமாசத்திற்கு ரூ 1—10—0 மும் தபாற்செலவு சேர்த்தனுப்பவேண்டும். ஒரு வருஷத்திற்குப் பணமனுப்ப விரும்புகிறவர்கள் ஆறுமாசத்தொகைக்கு இரட்டிப்பு அனுப்பவேண்டும். தபாற்செலவு குறைவுபடக் கோருகிறவர்கள் தெரிவித்தால், பத்திரிகைகள் இரண்டுவாரத்திற்கொருவிசை சேர்த்தனுப்பப்படும் பட்சத்தில், பாதியும், நான்குவாரத்துக்கொருவிசை சேர்த்தனுப்பப்படும் பட்சத்தில் முக்கால்பங்கும் தபாற்செலவு கூடிவரும்.

Printed and Published for the Proprietor at the VURTHAMANATHARUNGINI PRESS, No. 174, Davaraja Moodelly Street,—Madras.